Under Section 173 BNSS

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319451

1. District : மாவட்டம் Tiruppur | PS: காவல்நிலையம் VAC | Year: ஆண்டு 2026 | FIR No.: முத.அ. எண் 7/2026/ACTPR | Date: நாள் 07.07.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended by PC (Amendment) Act, 2018 | Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 03.07.2026 | Date to : நாள் வரை 06.07.2026
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 15.30hrs | Time to : நேரம் வரை 13.00hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.07.2026 | Time : நேரம் 08.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D. Vol.1 | Time : நேரம் 08.30 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Tamil Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் A-1 about 4km South East-1 Village Administrative office, Thottipalayam village, Tiruppur North Taluk, Tiruppur.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. Manivasagam | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S. Murugan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 31/2026 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
Date of Issue : வழங்கப்பட்ட நாள் – | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Welding Manager | (g) Address : முகவரி Door No. 10-4-82/8, Naicker New Street, Bodinaickenpatti, Vadipatti Taluk, Madurai District 625218.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Nazeer Abdul Rahman, VAO, Thottipalayam village, Tiruppur North Taluk, Tiruppur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
–

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

07/7/26

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 07.07.2026

Name: பெயர் K. SASILEKHA
Rank: நிலை Inspector of Police, No. எண்
VSAC, Tirupur
07.07.2026

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற நீதிபதி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 7/2026/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 07.07.2026- ம் தேதி காலை 08.30 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திரு. M.மணிவாசகம், த/பெ.S.முருகன், கதவு எண்.10-4-82/8, நாயக்கர் நியூ தெரு, போடிநாயக்கன்பட்டி, வாடிபட்டி தாலுகா, மதுரை மாவட்டம் என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி கொடுத்த தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர். M.மணிவாசகம், த/பெ.S.முருகன், கதவு எண்.10-4-82/8, நாயக்கர் நியூ தெரு, போடிநாயக்கன்பட்டி, வாடிபட்டி தாலுகா, மதுரை மாவட்டம் 625 218. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, திருப்பூர். எனது சொந்த ஊர் மதுரை மாவட்டம், வாடிபட்டி தாலுகா, போடிநாயக்கன்பட்டி, நாயக்கர் நியூ தெரு ஆகும். திருப்பூர் மாவட்டம், மூம்மூர்த்தி நகர், பி.என்.ரோடு, பழனிசாமி நகர், கதவு எண்.1439/15ஏ என்ற முகவரியில் திரு.டி.கே.நாகமணி மற்றும் திருமதி.சத்தியப்ரியா ஆகியோர் பார்ட்னராக Cotton Buds Inc என்ற பெயரில் Garments Manufacturer & Exporter நிறுவனத்தை 8 வருடமாக நடத்தி வருகிறார்கள். நான் அந்த நிறுவனத்தில் ஹாஸ்டலில் தங்கி மேலாளராக 6 வருடமாக வேலை செய்கிறேன். அந்த நிறுவனத்திற்கு பக்கத்தில் தொட்டிபாளையம் கிராமம், க.ச.எண்.300/1-ல் 8733.1/2 சதுரடி இடத்தை எனது ஓனர் Cotton Buds Inc நிறுவனத்தின் பெயரில் வாங்கியுள்ளார். அது தொட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1078/2026 நாள் 5.3.2026 தேதி பதிவாகியுள்ளது. கம்பெனி பெயரில் பட்டா மாறுதல் செய்ய தொட்டிபாளையம் கிராம நிர்வாக அலுவலர் லாக் இன்க்கு சென்றுள்ளது. அந்த பட்டா மாறுதல் ரிஜக்ட் ஆகியுள்ளது. எனது ஓனர் திரு.டி.கே.நாகமணி அவர்கள் என்னிடம் ஆவணங்களை கொடுத்து அவர் சார்பாக கம்பெனி பெயரில் பட்டா மாறுதல் வேலைகளை கவனிக்க எனக்கு எழுத்து பூர்வமாக

10.03.2026 தேதி அங்கீகார கடிதம் கொடுத்திருந்தார். நான் அந்த கடிதத்தை பெற்று தனியார் இ-சேவை மையத்தில் நில ஆவணங்களுடன் 25.5.2026 தேதி ஆன்லைனில் கம்பெனி பெயரில் பட்டா மாறுதலுக்கு விண்ணப்பம் செய்தேன். அந்த அப்ளிகேசன் எண். 2026/0103/32/029027 படி ஒப்புகை சீட்டு கொடுத்தார்கள். அதன் பிறகு அந்த விண்ணப்ப நிலையை தெரிந்து கொள்ள 15.6.2026 தேதி ஆன்லைனில் பட்டா மாறுதல் உத்தரவை எடுத்து பார்த்த போது அந்த உத்தரவில் பட்டா எண்.4677 புல எண்.300/1A1B4B – ல் 0-7.60 ஹெக்டேர் ரங்கசாமி மகன் தங்கவேல் மற்றும் கிருஷ்ணன் மனைவி நாகமணி என தவறாக இருந்தது. அதன்பின்னர் நான் தனியார் இ-சேவை மையத்தில் நில ஆவணங்களுடன் 22.6.2026 தேதி ஆன்லைனில் கம்பெனி பெயரில் பட்டா மாறுதலுக்கு விண்ணப்பம் செய்தேன். அந்த அப்ளிகேசன் எண். 2026/0103/32/037093 படி ஒப்புகை சீட்டு கொடுத்தார்கள். அதன்பின்னர் நான் 2,3 நாட்கள் கழித்து தொட்டிபாளையம் விஏஓ அலுவலகம் சென்று இன்சார்ஜ் விஏஓ திரு.நசீர் அப்துல் ரகுமான் அவர்களை பார்த்து ஏற்கெனவே ஆன்லைனில் அப்ளை செய்த அப்ளிகேசன், பட்டா மாறுதல் உத்தரவு மற்றும் 22.6.2026 தேதி ஆன்லைனில் அப்ளை செய்த அப்ளிகேசனையும், நிலம் சம்பந்தமான ஆவணங்களையும் கொடுத்து பட்டாவில் பெயர் தவறாக உள்ளதாகவும், Cotton Buds Inc நிறுவனத்தின் பங்குதாரருமான டி.கே.நாகமணி என்ற பெயரில் பட்டா மாறுதல் செய்யுமாறு கேட்டுக்கொண்டேன். அவர் நான் கொடுத்த அப்ளிகேசன், பட்டா மற்றும் ஆவணங்களை பார்த்துவிட்டு 2, 3 நாளில் பட்டா மாறுதல் ஆகிவிடும் என்று சொன்னார். நான் அங்கிருந்து வந்துவிட்டேன். அதன் பிறகு அந்த விண்ணப்பத்தின் நிலையை தெரிந்து கொள்ள 27.6.2026 தேதி ஆன்லைனில் பட்டா மாறுதல் உத்தரவை எடுத்து பார்த்த போது அந்த உத்தரவில் பட்டா எண்.4677 புல எண்.300/1A1C8B – ல் 0-0.52 ஹெக்டேர் ரங்கசாமி மகன் தங்கவேல் மற்றும் நாகமணி மகன் கிருஷ்ணன் என தவறாக இருந்தது. அதன்பின்னர் நான் 29.6.2026 தேதி சுமார் 12.30 மணியளவில் தொட்டிபாளையம் விஏஓ அலுவலகம் சென்று இன்சார்ஜ் விஏஓ திரு.நசீர் அப்துல் ரகுமான் அவர்களை பார்த்து பட்டாவில் பெயர் மீண்டும் தவறாக உள்ளதாக கூறி Cotton Buds Inc நிறுவனத்தின் பங்குதாரருமான டி.கே.நாகமணி என்ற பெயரில் பட்டா மாறுதல்

வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அவர் என்னிடம் மீண்டும் அப்ளிகேசன் செய்து விட்டு வந்து பார்க்குமாறு சொன்னார். நான் 1.7.2026 தேதி திருப்பூர் வடக்கு தாலுகா அலுவலகத்தில் இ-சேவை மையத்தில் ஆன்லைனில் கம்பெனி பெயரில் பட்டா மாறுதலுக்கு விண்ணப்பம் செய்தேன். அந்த அப்ளிகேசன் எண்.2026/ 0103/32/039597 படி ஒப்புகை சீட்டு கொடுத்தார்கள். அதன்பின்னர் நான் 3.7.2026 தேதி மாலை சுமார் 3.30 மணியளவில் தொட்டிபாளையம் விஏஓ அலுவலகம் சென்று இன்சார்ஜ் விஏஓ திரு.நசீர் அப்துல் ரகுமான் அவர்களை பார்த்து ஆன்லைன் அப்ளிகேசனை கொடுத்தேன். அவர் அப்ளிகேசனை பார்த்துவிட்டு இந்த அப்ளிகேசனை பார்வேர்டு செய்ய தனக்கு பணம் ரூ.10,000/- தனியாக வேண்டும் என்று கேட்டார். நான் அவரிடம் ஓனரிடம் கேட்டு சொல்வதாக கூறிவிட்டு வந்துவிட்டேன். 4.7.2026 தேதி மாலை சுமார் 5.20 மணியளவில் எனது செல்போன் எண்.8098002670-க்கு விஏஓ திரு.நசீர் அப்துல் ரகுமான் அவர்களது செல்போன் எண்.9942286826-லிருந்து மிஸ்ட் கால் வந்தது. நான் சுமார் 5.25 மணியளவில் அவருக்கு அழைத்து பேசிய போது நீங்கள் ஓனரிடம் நான் கேட்ட பணம் பற்றி பேசிவிட்டீர்களா என்று கேட்டார். நான் இன்னும் ஓனரிடம் பேசவில்லை. திங்கட்கிழமை பேசிவிட்டு சொல்கிறேன் என்று கூறினேன். அவர் நீங்கள் பேசிவிட்டு நேரில் வாங்க என்று சொன்னார். நான் 6.7.2026 தேதி மதியம் சுமார் 1 மணியளவில் விஏஓ அலுவலகம் சென்று இன்சார்ஜ் விஏஓ திரு.நசீர் அப்துல் ரகுமான் அவர்களை பார்த்த போது அமவுண்ட் கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் எனது ஓனர் ரூ.10,000/- அதிகமாக உள்ளது தங்களிடம் நேரில் பேசுமாறு கூறினார் என்ற விவரத்தை தெரிவித்தேன். அதற்கு முதலில் மறுத்தவர் பின்பு சரி தங்களுக்காக ரூ.5,000/- குறைத்து கொள்கிறேன். மீதி ரூ.5,000/- கண்டிப்பாக கொடுக்க வேண்டும் நீங்கள் ரூ.5,000/-த்தை எவ்வளவு சீக்கிரமாக கொடுக்கிறீர்களோ உங்கள் வேலையை சீக்கிரமாக முடித்து கொடுக்கிறேன் என்று சொன்னார். இதுபற்றி நான் எனது ஓனரிடம் சொன்னபோது அவருக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பமில்லை எனவும் அவர் என்னிடம் விஜிலென்சில் புகார் கொடுக்க சொன்னார். நான் எனது ஓனரின் நிறுவனம் பெயரில் பட்டாவில் பெயரை சேர்க்க திருப்பூர் வடக்கு தாலுகா, தொட்டிபாளையம்

இன்சார்ஜ் விஏஓ திரு.நசீர் அப்துல் ரகுமான் அவர்களுக்கு பணம் ரூ.5,000/- லஞ்சமாக கொடுக்க விருப்பமில்லை. எனக்கும் விருப்பமில்லை. விஏஓ லஞ்சமாக கேட்ட பணம் ரூ.5,000/-த்தை எனது ஓனர் நாகமணி என்னிடம் கொடுத்தார். எனவே அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். Sd/-xxxx M.Manivasagam, 07/07/26. Sir, Received the complaint on 07.07.2026 at 08.30 hrs and made preliminary verification between 08.30 hrs and 09.00 hrs after getting approval from DVAC, Chennai and registered a case in Tiruppur V&AC Cr.No.7/2026/AC/TPR u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 07.07.2026 between 09.10 hrs to 10.10 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 07/07/2026 Inspr. V&AC, TPR.

Original FIR along with original complaint of M.Manivasagam, S/o.S.Murugan, Door.No.10-4-82/8, Nayakkar New Street, Bodinayakkan patti, Vaadipatti Taluk, Madurai District is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Principal District and Sessions Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 07.07.2026